1972 டிசம்பர் 4]

திரு. சு. துரைசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அவ்வாறு கடன் பெற்றவர்கள் அந்த குறிப்பிட்ட காலத்திற்குள் கொடுக்காவிட்டால், அப்படிக் கொடுக்காதவர்கள் மீது என்ன நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, காலம் கடந்து தவணைத் தொகை வசூலிப்பதற்கு அவர்களுக்கு முறைப்படி அறிவிப்பு கொடுக்கப்பட்டு, வசூலிப்பதற்கான நடவடிக்கைகளை அந்தத் துறை மேற்கொண்டிருக்கிறது. இப்படி நிறைய புகார்கள் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து வந்த காரணத்தால் வெகு சீக்கிரத்தில் அந்தச் சங்கத்தைக் கலைப்பதற்கு நடவடிக்கைகளை அந்தப் பால் துறையினர் எடுத்து வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

மு.ப 10–0

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவையின் விதி 6 உள்விதி (1)ன் கீழ், இப்பேரவையின் மாற்றுத் தலைவர்களாகக் கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்களை நான் நியமிக்கிறேன்.

(1) திரு. செ. கந்தப்பன்.

(2) திரு. ந. கணபதி.

(3) திரு. கே. கந்தசாமி.

(4) திரு. எம். ஏ. லத்தீப்.

(ஆ) அமைச்சரவையின் மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம்

MR. DEPUTY SPEAKER : I have to announce to the House that I have received notice of a Government Motion of Vote of Confidence in the Council of Ministers.

There is no special rule in relation to such a motion in the Assembly Rules except Rule 68 which generally deals with 'Motions'. However, there is a precedent for such a motion. On 30th June 1952, such a motion of Vote of Confidence in the

Council of Ministers was taken up in the then Madras Legislative Assembly in accordance with the practice in England. I therefore propose to follow that precedent.

I now request the Hon. Chief Minister to move this motion.

3. அமைச்சரவைமீது நம்பிக்கைத் தெரிவிக்கும் நிர்மானம்

THE HON. DR. M. KARUNANIDHI: Sir, I hereby give notice of the following Motion which is requested to be taken up immediately after Questions on Monday the 4th December 1972 :—

'This House expresses its confidence in the Council of Ministers of which Thiru M. Karunanidhi is the Chief Minister.'

MR. DEPUTY SPEAKER: Now the motion is moved. I would like to consult leaders of parties to fix time.

திரு. ஏ. ஆர். பெருமாள்: அதைப்பற்றி பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியில் பேசிக் கொள்ளலாம் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்: இந்த விஷயத்தை பிஸினஸ் அட்வைஸரிக் கமிட்டியில் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பார்வேர்ட் பிளாக் கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் அவர்களும் சொன்ன கருத்தை ஏற்றுக்கொண்டு, இதை அலுவல் ஆய்வுக் குழுவில் வைத்து, இதற்கான நாளை நிர்ணயித்துக் கொள்ளலாம் என்ற கருத்துக்கு நான் ஆதரவு அளிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதுகுறித்து நான் பிஸினஸ் அட்வைஸரிக் கமிட்டியில் முடிவு செய்யப்படும்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு விவசாய வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/72) மீதான ஆய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு விவசாய வருமானவரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/72) மீதான ஆய்வுக் குழுவின் அறிக்கையை நான் இந்த மன்றத்திற்கு அளிக்கின்றேன்.